TNVR020101242022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II திருவில்லிபுத்தூர்.

முன்னிலை – திரு.S.A.வள்ளிமணாளன்,B.A.,B.L., (Hons)., LL.M.,

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.772/2022

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,

மல்லி காவல் நிலையம்,

குற்ற எண்.72 /2022 .... குற்ற முறையிடுபவர்

–எதிர்–

1. வெங்கடேசன்,

த.பெ.பெருமாள்சாமி,

D1/26 TNHB சிவகாசி மேற்கு,

சிவகாசி.

2. கனகராஜ்,

த.பெ. அழகர்சாமி,

நாயுடு தெரு,

ஆணைக்குட்டம்,

சுக்கிரவார்பட்டி. ...... எதிரிகள்

இவ்வழக்கானது 15.10.2022ம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு 03.01.2023ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை II திரு.S.பொன்ராஜ், M.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.இராம்குமார் அவர்கள் ஆஜராகியும் இருந்த நிலையில் இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

## தீர்ப்புரை

1. <u>எதிரிகள் மீது மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற எண்.72/2022ல் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு–</u>

புகார்தாரர் கோமதியின் கணவர் அடிக்கடி குடித்துவிட்டு அவரிடம் பிரச்சினை செய்து வந்த நிலையில், கடந்த 29.07.2022ம் தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் வழக்கம்போல் புகார்தாரரின் கணவர் பாலமுருகன் குடித்துவிட்டு வந்து பிரச்சினை செய்ததை புகார்தாரர் கோமதி அவரது அக்கா பகவதிக்கு போன் செய்து சொல்லியுள்ளார். பின்னர் இரவு 9.00 மணியளில் புகார்தாரரின் அக்கா பகவதியின் கணவரான 1வது எதிரி வெங்கடேஷன் என்பவர் கையில் சுத்தியலுடனும், புகார்தாரரின் சித்தப்பாவான 2வது எதிரி கனகராஜ் ஆகிய இருவரும் புகார்தாரரின் வீட்டின் சாத்தியிருந்த கேட்டை தள்ளி, அத்துமீறி உள்ளே நுழைந்து வீட்டின் போர்டிகோவில் நின்று கொண்டிருந்த புகார்தாரரின் கணவரை பார்த்து 1வது எதிரி ஏண்டா குடிகார

தேவிடியா மகனே எப்படிடா என்னையும் உன் பொண்டாட்டியையும் சம்பந்தபடுத்தி பேசுவ உன் கை கால்களை உடைச்சாந்தான்டா நீ சரிப்பட்டு வருவ என்று அசிங்கமாக பேசி, புகார்தாரரின் கணவரை கீழே தள்ளி, 1வது எதிரி கையில் வைத்திருந்த சுத்தியலால் பாலமுருகனின் இடது மற்றும் வலது கையை பிடித்து தரையோடு சேர்த்து வைத்து கைவிரல்கள் மற்றும் வலது இடது முழங்கைகள், வலதுகால் மற்றம் இடது கால் விரல்களில் மாறி மாறி அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், பின்னர் வெங்கடேஷனும் அவருடன் வந்த கனகராஜீம் பாலமுருகனை ஓட விடாமல் வழிமறித்து மறுபடியும் கீழே தள்ளி 1வது எதிரி பாலமுருகனை நெஞ்சில் மாறி மாறி மிதித்து சிறுதன்மை காயத்தை ஏற்படுத்தியும், 2வது எதிரி பாலமுருகனை பார்த்து டேய் புண்டை மகனே கூதி மகனே என்று அசிங்கமாக பேசிக் கொண்டே அவர் கையில் வைத்திருந்த அருவாளை வைத்து பாலமுருகின் வாயில் கொத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், பின்னர் எதிரிகள் கையில் வைத்திருந்த அரிவாள், சுத்தியலை காண்பித்து பாலமுருகனை பார்த்து டேய் குடிகார கூதி மகனே இனிமே என்னையும் உன் பொண்டாட்டியையும் சம்பந்தபடுத்தி பேசின உன்னை கொன்னு இந்த இடத்திலேயே புதச்சுடுவோம் என்று உயிர் பயம் ஏற்படும் வகையில் மிரட்டி கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளதாக 1வது எதிரி மீது பிரிவுகள் 448, 294(பி), 326, 342, 323, 506(2) இதசவின் படியும், 2வது எதிரி மீது பிரிவுகள் 448, 342, 2949பி), 326, 506(2) இதசவின் கீழ் 23.09.2022ம் தேதி குவிமுச பிரிவு 173(2)ன் கீழ் மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) அழைப்பாணையின் பெயரில் எதிரிகள் இந்நீதிமன்றம் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு வழக்கின் நகல்கள் யாவும் குவிமுச.207 பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டு, 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 448, 294(பி), 326, 342, 506(2)இதசவின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவிய போது, எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்து மேற்கண்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இந்நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டினர்.

3) இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் புகார்தாரரும், எதிரிகளும் சமாதானமாக செல்வதாக கூறி கு.வி.மு.ச பிரிவு 320(2) ன் படி சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் மீதான குற்றமானது சமாதானமாக போக முடியாத குற்றமாக உள்ள நிலையில் மேற்படி சமாதான மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

4) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் –</u>

அரசு தரப்பில் இந்த வழக்கில் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 11 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அ.சா.1 கோமதி, அ.சா.2 பாலமுருகன் ஆகியோர்கள் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு இரவு சுமார் 9 மணியளவில் அவர்களது வீட்டிலிருந்த போது அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் நுழைந்து, தகாத வார்த்தைகளால் திட்டி, அ.சா.2 ஐ கீழே தள்ளி விட்டு கையில் வைத்திருந்த கம்பியால் அ.சா.2 ஐ கையில் தாக்கியதில் அ.சா.2 க்கு கைவிரல்கள் மற்றும் முழங்கையில் காயம் ஏற்பட்டுள்ளது அ.சா.2 ஐ சிகிச்சைக்காக சிவகாசி மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். பின்னர் மதுரை

வேலம்மாள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாகவும், 30.07.2022 ம் தேதி தலைமை காவலர் ஆறுமுகராஜ் என்பவர் அ.சா.2 சிகிச்சையில் இருந்ததால் அ.சா.1 யிடம் அ.சா.ஆ.2 புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 72/2022 பிரிவுகள் 448, 342, 294(பி), 323, 324, 506(2) இதசவின் கீழ் அ.சா.ஆ.3 முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். தலைமை காவலர் பதிவு செய்திருந்த வழக்கினை அ.சா.5 சார்பு ஆய்வாளர் செல்லப்பாண்டியன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 30.07.2022 ம் தேதி பகல் 13.30 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் முத்து, ரெங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வைமகசர், அ.சா.ஆ.5 வரைபடம் தயார் செய்தும், பின்னர் வழக்கு சம்பந்தமாக சாட்சிகள் கோமதி, பாண்டி மணிகண்டன், முத்துமகேஷ், கண்ணன், வளர்மதி, முத்து, ரெங்கராஜ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் 31.07.2022 ம் தேதி காலை 7.00 மணியளவில் தனக்கு கிடைத்த தகவலின் பேரில் சிவகாசிபஸ் நிலைம் அருகில் வைத்து 1ம் எதிரி வெங்கடேஷ் என்பவரை கைது செய்து அவரிடமிருந்து சாட்சிகள் முத்துராஜ், முத்துகுமார் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தும். அதன் பேரில் 1ம் எதிரி வெங்கடேஷ் சுத்தியலை தங்களிடம் ஆஜர் செய்ததை அ.சா.ஆ.7 அத்தாட்சியின் மூலம் கைப்பற்றியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 என்றும், 2ம் எதிரி திருவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்து தக்க பிணையில் சென்றுள்ளார் என்றும், வழக்கில் காயம்பட்ட பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பாலமுருகனுக்கு சிகிச்சை அளித்த

சிவகாசி மருத்துவர் முருகானந்தம் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.8 விபத்து பதிவேட்டு நகல் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தும், வழக்கில் காயம்பட்ட பாலமுருகன் என்பவருக்கு மேல் சிகிச்சை அளித்த வேலம்மாள் மருத்துவமனை மருத்துவர் நவின்குமார் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.9 காயச்சான்று மற்றும் அ.சா.ஆ.10 விபத்து பதிவேட்டு நகல் பெற்றுள்ளார். பாலமுருகனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 448 342, 294(பி), 323, 324 506(2) இதசவிலிருந்து 448, 342, 294(பி), 326, 323, 506(2) இதசவாக சட்டப்பிரிவு மாற்றம் செய்து அ.சா.ஆ.11 சட்டமாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இத்துடன் தனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது 23.09.2022ம் தேதி பிரிவுகள் 448, 342, 294(பி), 326, 323, 506(2) இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும், இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிக்கப்பட்டது.

5) இந்நிலையில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை –II அவர்கள் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறி விட்டதால், மற்ற சாட்சிகளை விசாரிக்க தேவையில்லை என மேற்குறிப்பு செய்ததன் பேரில், அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.

6) **<u>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் படி கேள்வி</u>**

கு.வி.மு.ச பிரிவு 313(1) (ஆ)ன் படி சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியங்களை, எதிரிகளிடம் எடுத்துக் கூறி விளக்கி வினவிய போது, எதிரிகள் பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும் தங்கள் தரப்பில்

விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினர். எதிரிகளின் சார்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

7) இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவெனில்

**7.1** எதிரிகள் புகார்தாரரின் கணவரிடம் பிரச்சினை செய்ய வேண்டும் என்பதற்காக புகார்தாரரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்துள்ளார்கள் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிருபித்துள்ளதா என்பதேயாகும்?

**7.2** எதிரிகள் சம்பவநாளில் பொதுயிடத்தில் வைத்து புகார்தாரரின் கணவரை ஆபாசமான வார்த்தைகளால் பேசி மற்றவர்களுக்கு அருவருக்கதக்க நிலையை ஏற்படுத்தியுள்ளார் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிருபித்துள்ளதா என்பதேயாகும்?

**7.3** எதிரிகள் புகார்தாரின் கணவரை முறையின்றி பிடித்துக் கொண்டு சிறை வைத்துள்ளார்கள் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிருபித்துள்ளதா என்பதேயாகும்?

**7.4** எதிரிகள் புகார்தாரின் கணவரை ஆபாயகரமான ஆயுதமான சுத்தியல், அரிவாள் ஆகியவற்றை வைத்து கொடுங்காயத்தை விளைவித்துள்ளார்கள் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிருபித்துள்ளதா என்பதேயாகும்?

**7.5** எதிரிகள் சம்பவநாளில் புகார்தாரரின் கணவரை கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் கொலை மிரட்டல் விடுத்ததன் அடிப்படையில் புகார்தாரருக்கு உயிர்பயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிருபித்துள்ளதா என்பதேயாகும்?

8) அரசு தரப்பு வழக்கானது கடந்த 29.07.2022ம் தேதி இரவு 9.00 மணியளவில் எதிரிகள் அ.சா.1ன் வீட்டில் அத்துமீறி உள்ளே நுழைந்து, அ.சா.2 ஐ அசிங்கமான வார்த்தைகளால் பேசி, வழிமறித்து 1வது எதிரி சுத்தியலால் கை, கால்களில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2 வது எதிரி அ.சா.2 ஐ அரிவாளால் வலது பக்க வாயில் கொத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்து சென்று குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதாகும்.

9) அரசு தரப்பில் புகார்தாரரான அ.சா.1 கோமதி கொடுத்த அ.சா.ஆ.2 புகார் மனுவில் தனது கணவர் பாலமுருகன் அடிக்கடி குடித்துவிட்டு தன்னிடம் பிரச்சினை செய்து வந்த போது தனது உறவினர்களான அக்கா பகவதி, மாமா வெங்கடேஷன், சித்தப்பா கனகராஜ் ஆகியோர்களிடம் சொல்வேன் அவர்களும் தன் கணவரை சத்தம் போட்டு கண்டித்து வந்தார்கள். காலபோக்கில் தன் கணவர் தன்னையும் தன் அக்கா கணவரையும் சம்பந்தபடுத்தி சந்தேகப்பட்டு பேசி பிரச்சினை செய்து வந்த நிலையல் 29.07.2022 ம் தேதி இரவு சுமார் 7 மணியளவில் தன் கணவர் குடித்துவிட்டு வழக்கம் போல் பிரச்சினை செய்து வந்ததை போன் செய்து தன் அக்காவிற்கு சொன்ன போது தன் அக்காவின் கணவர் வெங்கடேஷன் கையில் சுத்தியலுடனும், தனது சித்தப்பா கனகராஜ் அரிவாளுடனும் வந்து தங்கள் வீட்டின் கேட்டை தள்ளி அத்துமீறி உள்ளே வந்து தன் கணவரை பார்த்து வெங்கடேஷன் குடிகார தேவிடியா மகனே எப்படிடா என்னையும் உன் பொண்டாட்டியையும் சமபந்தபடுத்தி பேசுவ உன் கை கால்களை உடைச்சாந்தான்டா நீ சரிபட்டு வரு என்று அசிங்கமாக பேசி, தன் கணவரை கீழே தள்ளி கையில் வைத்திருந்த சுத்தியலால் தன் கணவரின் இடது மற்றும் வலது கையை

பிடித்து தரையோடு சேர்த்து வைத்து கைவிரல்கள் மற்றும் வலது இடது கை முழங்கைகளும், வலது கால், இடது கால் விரல்களில் மாறி மாறி அடித்த போது தன் கணவர் எழுந்து ஓட முயன்ற போது இருவரும் தன் கணவரை ஓடவிடாமல் தடுத்து பிடித்தும் வெங்கடேஷ் தன் கணவரை மீண்டும் கீழே தள்ளி நெஞ்சில் மாறி மாறி மிதித்தும் கனகராஜ் தன் கணவரை பார்த்து டேய் புண்டை மகனே கூதி மகனே என்று அசிங்கமாக பேசி, அவர் கையில் வைத்திருந்த அரிவாளை வைத்து தன் கணவரின் வாயில் கொத்தினார் என்றும், பக்கத்தில் குடியிருக்கும் பாண்டிமணிகண்டன், கண்ணன் ஆகியோர்கள் ஓடி வந்து எதிரிகளை சத்தம் போட்ட போது இருவரும் அரிவாள், சுத்தியலை காட்டி டேய் குடிகார தேவிடியா கூதிமகனே இனிமே என்னையும் உன் பொண்டாட்டியையும் சம்பந்தபடுத்தி பேசினால் உன்னை கொன்று இந்த இடத்திலேயே புதச்சிடுவோம் என்று மிரட்டியதாகவும், தன் கணவர் சிகிச்சையிலிருந்த போது அங்கு போலீசாரிடம் நடந்த சம்பவத்திற்கு எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

10) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.2 புகார் மனுவில் எதிரிகள் தன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, அசிங்கமான வார்த்தைகளால் பேசி, தன் கணவரை தாக்கி, கொலை மிரட்டல் விடுத்தது குறித்து குறிப்பிட்டுள்ள போதிலும், அ.சா.1 தனது புகார் மனுவிற்கு மாறாக, தனது நீதிமன்ற விசாரணையில், கடந்த 4 மாதங்களுக்கு முன்பு இரவு சுமார் 9 மணியளவில் தானும் தன் கணவரும் வீட்டிலிருந்த போது அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து தகாத வார்த்தைகளால் பேசி, தனது கணவரை கீழே தள்ளிவிட்டு கையில் வைத்திருந்த

கம்பியால் கையில் அடித்து கைவிரல்கள் மற்றும் முழங்கையில் காயம் ஏற்படுத்தியதாகவும், தன் கணவர் சிகிச்சையிலிருந்த போது போலீசார் வந்து தன்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கியதாகவும், சம்பவமானது இரவு நேரம் என்பதால் தங்கள் வீட்டிற்குள் தனது கணவரை அடித்த நபர்களை தங்களால் அடையாளம் காணமுடியவில்லை என்று தனது புகார் மனுவிற்கும் நீதிமன்ற விசாரணைக்கும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

11) அ.சா.2 பாலமுருகன் தனது சாட்சியத்தில், கடந்த 4 மாதங்களுக்கு முன்பு இரவு சுமார் 9 மணியளவில் தானும், தன் மனைவியும் வீட்டிலிருந்த போது அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து தகாத வார்த்தைகளால் பேசி, தன்னை கீழே தள்ளிவிட்டு கையில் வைத்திருந்த கம்பியால் கையில் அடித்து கைவிரல்கள் மற்றும் முழங்கையில் காயம் ஏற்படுத்தியதாகவும், தான் சிகிச்சையிலிருந்த போது போலீசார் வந்து தன் மனைவியிடம் புகார் வாக்குமூலம் வாங்கியதாகவும், சம்பவமானது இரவு நேரம் என்பதால் தங்கள் வீட்டிற்குள் தன்னை அடித்த நபர்களை தங்களால் அடையாளம் காணமுடியவில்லை என்று அசா.1ன் சாட்சியத்திற்கும், அ.சா.1 கொடுத்த புகார் மனுவிற்கும் முரண்பட்டு சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகிவிட்டார்.

12) அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில், சம்பத்தின் போது அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் அ.சா.2 ஐ தாக்கியவுடன் அவர்களின் சத்தம் கேட்டு அ.சா.3 முத்துமகேஷ் சம்பவயிடத்திற்கு வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள்

ஆனால் அவர்களின் சாட்சியத்திற்கும் அரசு தரப்பு வழக்கிற்கும் முரண்படும் வகையில் அ.சா.3 முத்துமகேஷ், அ.சா.4 வளர்மதி ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில், அ.சா.1 ஐ தெரியும் என்றும், எதிரிகளை தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக நேரடியாக எதுவும் தங்களுக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகிவிட்டார்கள்.

13) அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள போதிலும், அவர குறுக்கு விசாரணையின் போதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவான சங்கதிகள் எதுவும் வெளிக் கொணரப்படவில்லை.

14) மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பான **“Shambu das vs State of Assam”**[(2010)10 SCC 374] என்ற தீர்ப்பின் அடிப்படையில் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை வெறும் உறுதிப்படுத்தும் சான்றவாணமாக(Corrobroative Evidence) மட்டும் தான் பயன்படுத்த முடியும் கனிசமான சான்றாக (Substantive Evidence) எடுத்துக் கொள்ள முடியாது. மேலும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ள சங்கதிகளை உறுதிப்படுத்தும் வகையில் .எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

15) மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பான **“Vadivelu Thevar vs The State Of Madras” [AIR 1957 SC 614]** states about the reliability of the witness as follows:-

> *Hence, in our opinion, it is a sound and well- established rule of law that the court is concerned with the quality and not with the quantity of the evidence necessary for, proving or disproving a fact. Generally speaking, oral testimony in this context may be classified into three categories, namely:*
>
> *(1) Wholly reliable.*

*(2) Wholly unreliable.*

*(3) Neither wholly reliable nor wholly unreliable.In the first category of proof, the court should have no difficulty in coming to its conclusion either way-it may convict or may acquit on the testimony of a single witness, if it is found to be above reproach or suspicion of interestedness, incompetence or subornation. In the second category, the court equally has no difficulty in coming to its conclusion. It is in the third category of cases, that the court has to be circumspect and has to look for corroboration in material particulars by reliable testimony, direct or circumstantial.*

முக்கிய சாட்சிகளான அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, அ.சா.2 ஐ தகாத வார்த்தையால் திட்டி, வழிமறித்து, கம்பியால் தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்களே தவிர, வழக்கில் உள்ள எதிரிகள் தான் அ.சா.2 ஐ வழிமறித்து, அடித்து காயம் ஏற்படுத்தி, பொதுயிடத்தில் வைத்து தகாத வார்த்தைகளால் பேசி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை நிருபிப்பதற்கு முழுமையாக நம்பதகுந்த சாட்சியமாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16) அ.சா.5 சார்பு ஆய்வாளர் செல்லப்பாண்டியன் தலைமை காவலர் ஆறுமுகராஜ் பதிவு செய்திருந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகளை விசாரணை செய்தது குறித்தும், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து அ.சா.5 சார்பு ஆய்வாளர் சாட்சியம் அளித்திருந்தாலும், புகார்தாரரான அ.சா.1 மற்றும்

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2 மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் எதிரிகள் அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, அசிங்கமான வார்த்தைகளால் பேசி, அ.சா.2 ஐ சுத்தியல் மற்றும் அரிவாளால் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தி, வழிமறித்து, கொலை மிரட்டல் விடுத்தது குறித்து எந்தவொரு சாட்சியமும் அளிக்காத நிலையிலும், அ.சா5 சார்பு ஆய்வாளர் அலுவலக ரீதியாக ஆற்றிய பணிகள் குறித்தும், வழக்காவணங்கள் குறித்தும் சாட்சியம் அளித்திருந்தாலும், அ.சா.5 சார்பு ஆய்வாளரின் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே அரசு தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவாறு எதிரிகள் அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, அ.சா.2 ஐ அசிங்கமான வார்த்தைகளால் பேசி, வழிமறித்து, சுத்தியல் மற்றும் அரிவாளால் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்து சென்று குற்றம் புரிந்துள்ளார்கள் என்று கருத இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

17) மேலே விவாதித்த வகையில் எதிரிகள் மீது பிரிவுகள் 448, 294(b), 342, 326, 506(II) இதசவின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக எதிரிகள் பிரிவுகள் 448, 294(b), 342, 326, 506(II) இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் பி.ஆர்.எண் 303/2022 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுமார் 37 செமீ மரக் கைப்பிடியுடன் சுமார் 10 செமீ இரும்பு பிடியுடன் கூடிய சுத்தியல் ஒன்றை வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2023 ம் வருடம் ஜனவரி மாதம் 06 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S A VALLIMANALAN Digitally signed by S A VALLIMANALAN

நீதித்துறை நடுவர் எண்.II
திருவில்லிபுத்தூர்.

<u>அரசுத் தரப்பு சாட்சிகள் –</u>

அ.சா.1 – கோமதி

அ.சா.2 – பாலமுருகன்

அ.சா.3 – முத்துமகேஷ்

அ.சா.4 – வளர்மதி

அ.சா.5 – செல்லப்பாண்டியன் (சார்பு ஆய்வாளர்)

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள் –</u>**

அ.சா.ஆ.1 – புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து

அ.சா.ஆ.2 – புகார் மனு

அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 – பார்வைமகசர்

அ.சா.ஆ.5 – வரைபடம்

அ.சா.ஆ.6 – ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.7 – அத்தாட்சி

அ.சா.ஆ.8 – விபத்து பதிவேட்டு நகல்

அ.சா.ஆ.9 – காயச்சான்று

அ.சா.ஆ.10 – விபத்து பதிவேட்டு நகல்

அ.சா.ஆ.11 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

<u>அரசு தரப்பு சான்று பொருள்</u> – இல்லை.

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்</u> – இல்லை.

S A VALLIMANALAN Digitally signed by S A VALLIMANALAN

நீதித்துறை நடுவர் எண்II,
திருவில்லிபுத்தூர்.

<u>குறிப்பு –</u>

1.விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.

2.சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

S A VALLIMANALAN Digitally signed by S A VALLIMANALAN

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.